## திராவிட மாடல் ஆட்சியைப் போல

# அனைத்து மக்களுக்குமான ஆட்சியை ஒன்றியத்தில் அமைக்க சூளுரைப்போம்!

### மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**தென்காசி, ஜன. 28-**

**மொழிப்போர் தியாகிகள் நினைவு நாள் பொதுக்கூட்டம் தென்காசியில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை தி.மு.க. துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு உரையாற்றினார்,**

**அவரது உரை வருமாறு:-**

“தலைவர் கலைஞர் உருவாக்கிய வள்ளுவர் கோட்டத்தையே மேடையாக அமைத்திருக்கிற மாவட்டச் செயலாளர் ஜெயபாலன் அவர்களுக்கு வாழ்த்துகள்.

தலைவர் கலைஞர் தன் வாழ்நாள் முழுதும் மக்களோடு ஒருவராக இந்த மண்ணின் மைந்தர்களில் ஒருவராக திமுக தொண்டர்களில் ஒருவராகத்தான் தன்னை பார்த்துக் கொண்டார். அப்படிப்பட்ட இந்த இயக்கத்தின் போராட்ட வரலாற்றை எடுத்துக் கொண்டால், திமுக என்ற பெயர் வைப்பதற்கு முன்னால் திராவிட இயக்கமாக இருந்ததில் இருந்தே மக்களுக்கான இயக்கம்தான்.

இங்கே பேசிய சகோதரர் ஷாகுல் ஹமீது நமது போராட்ட வரலாற்றை எடுத்து வைத்தார். இந்த போராட்டம் மொழிக்கான போராட்டம். அதைத் தாண்டி நம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கான போராட்டமும் கூட. இந்தி படிக்க வேண்டும், இந்திதான் நாட்டை இணைக்கக் கூடிய ஒரு மொழி என்று சொல்கிறார்கள்.

இந்தி வேண்டும் என்கிறவர்கள் படிக்கட்டும். யாரும் உங்களை வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை. இந்தி படிங்க. ஜெர்மன் படிங்க, ஃப்ரெஞ்ச் படிங்க, தெலுங்கு படிங்க, மலையாளம் படிங்க என்ன வேண்டுமானாலும் படிங்க. ஆனால் ஒரு மொழியை கொண்டு வந்து திணித்து இதுதான் உங்கள் அடையாளம் என்று சொல்லும்போதுதான் எதிர்க்கிறோம்.

வட இந்தியாவில் போஜ்பூரி என்ற ஒரு மொழி இருந்தது. இந்தி திணிக்கப்பட்ட பிறகு இன்று அங்கே போஜ்புரி பேசக்கூடிய மக்களே இல்லை என்று சொல்ல கூடிய நிலை உருவாகியிருக்கிறது.

**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**

இப்படி எத்தனையோ மாநிலங்களில் இந்தித் திணிப்பால் அங்குள்ள எத்தனையோ மொழிகள் வழக்கொழிந்து போய்விட்டன. நம்மிடம் இரு வார்த்தை மலையாளம் பேசினால் எப்படி இருந்தாலும் புரியும். கேரளாவில் போய் தமிழில் பேசினால் அவர்களுக்கும் புரியும். ஏனென்றால் இவை எல்லாமே ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை.

அதுமட்டுமல்லாமல் நாம் பேசாத ஒரு மொழி, நமக்குத் தெரியாத ஒரு மொழியை திணித்தால் என்னாகும்? இந்தி என்பது வேறு ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. அதை நம் மீது கொண்டு வந்து திணிக்கும்போது, ஒரு பரிட்சையை இந்தியில்தான் எழுதணும் என்று சொல்கிறபோது... அந்த இந்தி மொழிபேசக் கூடிய அதை தாய்மொழியாக கொண்டிருக்க கூடிய ஒரு மாணவன், அந்த மாநிலம் பயனடையும். ஆனால் அந்த தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நம்முடைய மாணவர்களுக்கு வந்து சேர வேண்டிய பதவிகள், பட்டங்கள் பெற அந்த மொழியே ஒரு தடையாக அமைந்துவிடும்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கீழப்பாவூர் மைதானத்தில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் சாகுல் அமீது,மாநில விவசாய அணி இணை செயலாளர்கள் அப்துல்காதர், செல்லப்பா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை, ஆறுமுகச்சாமி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

வேலை வாய்ப்புகள் பாதிக்கப்படும், நமக்கு கிடைக்கக்கூடிய உரிமைகள் பாதிக்கப்படும். கொஞ்சம் கொஞ்சமாக நமது அடையாளங்கள் மாற்றப்படும். இதை எதிர்த்துதான் நமது மொழிப்போர் தொடங்கியது.

இன்றுவரை மொழித் திணிப்பை நிறுத்தவில்லை. எந்தெந்த வழியில் திணிக்க முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் திணித்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் இன்று வரை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம், என்றென்றும் எதிர்ப்போம்.

ஏதோ திடீரென தமிழ்நாட்டின் மீது அக்கறை இருப்பதைப் போல தமிழர்கள் மீது அக்கறை இருப்பதை போல ஒன்றிய அரசு பா.ஜ.க. தலைவர்கள் திடீரென திருக்குறள் சொல்றாங்க. அது என்னவென்று நமக்குப் புரியலை. நம் ஊரில் கவர்னர் அடிக்கடி திருக்குறள், தத்துவங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**நேதாஜியின் படையில் தமிழர்கள்!**

நான் கேட்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் வங்கத்து மக்களுக்கு இணையாக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மீது பற்றும் பாசமும் மரியாதையும் வைத்துக் கொண்டாடக் கூடியவர்கள் தமிழர்கள். தமிழ்நாட்டில் தெற்கே வந்து பார்த்தீர்கள் என்றால் எத்தனையோ பேர்களுக்கு போஸ் என்று பெயர் வைத்திருப்போம். எங்களுக்கு அவர் யார் என்று தெரியும். நேதாஜியின் படையில் எத்தனையோ தமிழர்கள் பணியாற்றியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட தமிழகத்திலே நேதாஜியை புகழ்ந்து பேசுங்கள், எங்களுக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் அதற்காக மகாத்மா காந்தியை அண்ணல் காந்தியை குறைத்து பேசுவதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது. காந்தியின் தியாகம் போராட்டம் என்ன என்பது நம் அனைவருக்கும் தெரியும். அஹிம்சை என்ற கொடையை வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறார்.

கவர்னர் பேசியதில் இருந்து ஒன்று தெரிகிறது. நீங்கள் கோட்சேவுக்கு சொந்தக் காரர்கள். அப்படித்தான் பேசுவீர்கள். உங்கள் கருத்துகளை இங்கே திணிக்கிறீர்கள். ஒரு இந்தியா, ஒரு ரேஷன் கார்டு, ஒரு மொழி, ஒரு மதம் என்று எல்லா அடையாளத்தையும் அகற்றி கேரளாவுக்கு என்று அடையாளம் இருக்கக் கூடாது, தமிழ்நாட்டுக்கு என்று அடையாளம் இருக்கக் கூடாது. எல்லாவற்றையும் அடித்து உடைத்து அவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதை கொண்டு வந்து வைக்க வேண்டும் என்று நினைக்கக்கூடிய ஆட்சி அங்கே நடக்கிறது.

**மாநிலங்களுக்கான நிதியை குறைக்கும் மோடி!**

நமது பிரதமர் மாநில முதல்வராக இருந்தபோது மாநில உரிமைகள் பற்றி நிறைய பேசுவார். ஆனால் அவர் பிரதமராக வந்துவிட்ட பிறகு மாநிலங்களுக்கென்று வரி வருவாயில் நியாயமாக ஒதுக்க வேண்டியதை கூட அவர் ஒதுக்க மறுக்கிறார்.

ஒவ்வொரு மாநிலத்துக்கும் எவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்று வரையறுக்கும் திட்டக் குழு தலைவரிடமும், நிதி ஆணைய தலைவரிடமும் நம்முடைய பிரதமர் ஒரு கூட்டத்தைக் கூட்டுகிறார். அந்தக் குழு என்ன சொல்கிறது என்றால் மாநிலங்களுக்கு தரவேண்டிய தொகையை 42% ஆக உயர்த்தித் தர வேண்டும் என்று சொல்கிறது. ஆனால் பிரதமர் வேண்டாம் 33% கொடுத்தால் போதும் என்று சொல்கிறார்.

ஆனால் சில மாதங்களில் மோடி நாடாளுமன்றத்தில் பேசும்போது மாநிலங்களுக்கான வரி ஒதுக்கீட்டை நாங்கள் அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார். இதை திராவிட முன்னேற்றக் கழகம் வெளியே சொல்லவில்லை. அந்தக் குழுவிலே இருந்தவர்கள் வெளியே பேசியிருக்கிறார்கள்.

ஆனால் மாநில உரிமைகளுக்காக பேசக்கூடியவர்கள் என்று பா.ஜ.க.வினர் நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

குஜராத்தில் வெள்ளம் வருகிறது., அங்கே கோடிக்கணக்கில் கொடுக்கிறீர்கள். தமிழ்நாட்டில் சென்னையில் வெள்ளம். அந்த பாதிப்பு ஓய்வதற்குள் தென் மாவட்டத்தில் வெள்ளம். நெல்லை, தூத்துக்குடியில் வெள்ளம். இங்கேயும் பாதிப்பு ஏற்பட்டது. அதற்கான நிவாரணம் நம்மால் வழங்கப்பட்டது.

வெள்ளத்தைப் பார்வையிட வந்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ‘கோயில் பூஜை செய்பவருக்கு சம்பளம் போதவில்லை’ என்று சொல்கிறார். இதுதான் அவரது அக்கறை. அதன் பின் அவர் டெல்லி சென்றுவிட்டார். ஆனால் இது வரை ஒரு பைசா தமிழ்நாட்டுக்கு நிவாரணம் வரவில்லை.

குஜராத்தில், உத்திரப்பிரதேசத்தில் பிரச்சினை என்றால் அங்கே பணத்தைக் கொட்டிக் கொடுப்பீர்கள். ஆனால் உங்களுக்கு அதிகமான வரி வருவாயைத் தரக் கூடிய தமிழ்நாட்டுக்கு ஒரு பிரச்சினை என்றால் ஒரு பைசா கூட கொடுக்க மாட்டீர்கள்.

சமீபத்தில் பா.ஜ.க.வின் ஒரு தலைவர் சொல்கிறார், ஒன்றிய அரசின் திட்டங்களை நாம் நிறுத்துகி.றோம் என்று சொல்லியிருக்கிறார். இங்கே 100 நாள் வேலைத் திட்டத்துக்கு போகிறவர்கள் இருப்பீர்கள். அதில் சம்பளம் வந்து எத்தனை நாட்கள் ஆகிறது? முழுதாக 100 நாட்களும் வேலை கிடைப்பதில்லை. தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவின் பல மாநிலங்களிலும் இதுதான் நிலைமை. இந்தத் திட்டத்தை ஒழித்துக் கொண்டிருப்பது நாமா ஒன்றிய அரசாங்கமா?

**பா.ஜ.க. தலைவரின் பொய் பிரச்சாரம்!**

கிராமப்புற ஏழை மக்களுக்காக கொண்டுவரப்பட்ட திட்டம்தான் 100 நாள் வேலைத் திட்டம். ஆனால் அதற்கான நிதியை ஒவ்வொரு ஆண்டும் குறைத்து வருகிறது ஒன்றிய அரசு. தமிழ்நாட்டுக்கு டிசம்பர் வரைக்கும் 100 நாள் வேலைத் திட்டத்துக்கு தரவேண்டிய பாக்கி எவ்வளவு என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தேன். 367 கோடி ரூபாய் பாக்கி என்று அங்கே இருக்கக் கூடிய அமைச்சர் பதில் சொல்கிறார். ஆனால் இங்குள்ள பா.ஜ.க. தலைவர் நாம் திட்டத்தை நிறுத்துவதாக பொய் பிரச்சாரம் செய்கிறார்.

இவர்கள் ராமர் கோயில் திறக்கும் அன்று யாரும் எந்த பூஜையும் நடத்தக் கூடாது, கோயில்களை பூட்டிடவேண்டும் என்று நமது அரசு சொன்னதைப் போல ஒரு பொய் பிரச்சாரத்தை ஆரம்பித்தார்கள். நமது முதலமைச்சர் தெளிவாக அப்படி எதுவும் சொல்லப்படவில்லை என்று உண்மையைச் சொன்னார்.

பா.ஜ.க.வினர் கோயில்களை வைத்து அரசியல் செய்யக் கூடியவர்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் கலைஞர் காலம் தொட்டே கடவுள் மீது நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ பக்தர்களுக்கு பாதுகாப்பு தருபவர்கள் நாம். கோயில்களுக்கு ஒழுங்காக குடமுழுக்கு நடக்கிறது என்றால் அது நம் ஆட்சியில்தான்.

**திராவிட மாடல் ஆட்சி மக்களுக்கான ஆட்சி!**

நேற்று கன்னியாகுமரியில் நாலாயிரம் பேருக்கு பட்டா வழங்கினோம். அப்போது பேசிய அமைச்சர் பா.ஜ.க. நம்மைப் பற்றி தவறாக பிரச்சாரம் செய்கிறது என்று சொல்லி நம் ஆட்சியில் குடமுழுக்கு நடத்திய கோயில்களின் பட்டியலை சொன்னார்.

நான் பேசியபோது, ‘இன்றைக்கு பட்டா வழங்குகிறோம். இதில் எத்தனை பேர் இந்துக்கள் என்று கேட்டேன். அதில் கையை உயர்த்தியவர்கள் 80% இந்துக்கள்.

பெரும்பான்மையான இந்துக்களாக இருக்கட்டும், சிறுபான்மையான இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் யாரும் ஒடுக்கப்பட கூடாது எல்லா பிள்ளைகளும் படிக்க வேண்டும், எல்லாருக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அடித்தட்டு மக்களுக்குப் பட்டாக்களாக இருக்கட்டும், மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையாக இருக்கட்டும், மேல்படிப்பு படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாயாக இருக்கட்டும், இலவச விடியல் பயணமாக இருக்கட்டும். எல்லாருக்கும் சென்று சேர வேண்டும் என்று உழைத்துக் கொண்டிருக்கும் ஆட்சி நமது திராவிட மாடல் ஆட்சி. இது மக்களுக்கான ஆட்சி.

**ஒன்றிய ஆட்சி மாறினால்தான் நாடு காப்பாற்றப்படும்!**

இதேபோல மக்களுக்கான ஆட்சியை ஒன்றியத்திலே உருவாக்க வேண்டும். இப்போது இருக்கும் ஒன்றிய ஆட்சி மாற்றப்பட்டால்தான் நமது மொழி காப்பாற்றப்படும், நமது மாநில உரிமைகள் பாதுகாக்கப்படும், நமது பிள்ளைகளுக்கு படிக்கும் வாய்ப்புகள் கிடைக்கும்.

புதிய கல்விக் கொள்கை திட்டம் கொண்டு வருகிறார்கள். அதில் எல்லா கல்லூரிக்கும் நுழைவுத் தேர்வு. நம் பிள்ளைகள் கல்லூரிக்கு போகக் கூடாது. இதுதான் அவர்களது கனவுத் திட்டம்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு. தலித் மக்களுக்கு, சிறுபான்மை கிறிஸ்துவ இஸ்லாமிய மக்களுக்கு எதிரான இந்த ஆட்சி தூக்கி எறியப்பட வேண்டும். நல்லாட்சி நம்முடைய முதல்வர் அவர்கள் கனவு காணக் கூடிய ஆட்சி, நமது தலைவர் கலைஞர் நினைத்த ஒரு ஆட்சி, மாநிலங்களின் உரிமைகளை மதிக்க கூடிய ஆட்சி. நமது நியாயமாக வழங்க வேண்டிய நிதியை வழங்கக் கூடிய ஆட்சி. நமது மொழியை கலாச்சாரத்தை மதிக்கக் கூடிய ஆட்சி ஒன்றியத்திலே உருவாக வேண்டும்.

அதற்காக தமிழ்நாட்டில் 40க்கு 40 நாம் வெற்றி பெற வேண்டும். நாட்டில் ஒரு கூட்டாட்சியை உருவாக்க வேண்டும் என்பதை ஒரு சூளுரையாக எடுத்துக் கொள்வோம்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.



சிவகங்கையில் 3வது புத்தக கண்காட்சியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் ,எஸ்.மாங்குடி, சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரைஆனந்த், ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, தென்னிந்திய பதிப்பாளர் சங்கத்தலைவர், சேது. சொக்கலிங்கம் உட்பட அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட கொழுமம் கொண்டானில் தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமை வகித்து பேசினார். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காளியப்பன், மாவட்ட அவை தலைவர் மோகன், நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், தங்கராஜ், சுப்பிரமணி, ,தர்மராஜ், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் பொன்ராஜ், தலைமைக் கழக பேச்சாளர் ஆம்பூர் தர்மன், பொறியாளர் அணி செயலாளர் கருணாநிதி, நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி, ஒன்றிய பெருந்தலைவர்கள் சத்தியபுவனா, அய்யம்மாள், துணைப் பெருந்தலைவர்கள் தங்கம், காயத்ரி தேவி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் பாலு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# பிப்.16ம் தேதி தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்தம்!

சென்னை, ஜன. 28-

தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டம் சென்னையில் நடந்தது. இதில், தொ.மு.ச., ஏ.ஐ.டி யு.சி., சி.ஐ.டி.யு., எச்.எம். எஸ்., ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ. யூ.டி.யூ., ஏ.ஐ.சி.சி.டி.யு., டபுள்யு.பி.டி.யு.சி., எம்.எல். எப்., எல்.எல்.எப்., எஸ்.டி யு.சி. ஆகிய சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஒன்றிய அரசின் மக்கள் விரோத ஜனநாயக விரோத, விவசாயிகள் விரோத தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக பிப்.16ம் தேதி வேலை நிறுத்தம், கிராமங்களில் முழு அடைப்பு, மறியல் உள்ளிட்ட வடிவங்களில் போராட்டம் நடத்த வேண்டும் என்று மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாயிகள் ஐக்கிய முன்னணியின் கூட்டு கூட்டம் முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டில் பிப்.1க்கு முன் துறை வாரியாகவும் தொழிற்சாலை அளவிலும் வேலை நிறுத்த முன்னறிவிப்பு நோட்டீஸ் தர வேண்டும். பிப்.16ம் தேதி வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற ஏற்பாடுகளையும் திட்டமிட்டு செய்ய வேண்டும். விவசாயிகள் சங்கங்களின் கிராமப்புற போராட்டம் வெற்றிபெற தொழிற்சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கோரிக்கைகளை விளக்கி விரிவான பரப்புரை இயக்கம் மேற்கொள்ள வேண்டும். தெரு முனை கூட்டங்கள், ஆலை வாயில் கூட்டங்கள், தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் வீடு வீடாகச் சென்று துண்டறிக்கை விநியோகித்தல் உள்ளிட்ட வடிவங்களில் இந்த இயக்கத்தை நடத்த வேண்டும். இளைஞர், மாணவர், பெண்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய துறையினர், சிறுகுறு தொழில் நிறுவனங்கள், வர்த்தகர்கள் உள்ளிட்டவர்கள், கோரிக்கையை ஆதரித்து போராட உடன் வரும் மக்கள் அமைப்புகளிடமும் ஆதரவு கோரி, மறியல் போராட்டத்தில் பங்கேற்க செய்ய வேண்டும் என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.



விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் இராஜபாளையம் தொகுதியில் மொழிப்போர்த் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் செட்டியார்பட்டி பேரூராட்சி அருகிலுள்ள ஆறு சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கலையரங்கத்தில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஸ்டார் சி.வேல்முருகன் தலைமையில் தனுஷ் எம்.குமார் எம்.பி. மற்றும் நமது மக்கள் எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ., முன்னிலையில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் ஆவடி பாஸ்கர் மற்றும் எம். எல்.நாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். அதனைத்தொடர்ந்து ஒன்றிய துணை சேர்மன் துரை கற்பகராஜ் கூறினார். இந்நிகழ்வில் நகராட்சி சேர்மன் பவித்ராஷியாம், நகர செயலாளர்கள் ராமமூர்த்தி, மணிகண்டராஜா, பொதுக்குழு உறுப்பினர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்கள், மாவட்ட ஒன்றிய நகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வார்டு செயலாளர்கள், கிளை செயலாளர்கள், கழக நிர்வாகிகள், முன்னோடிகள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.